N-1570

COURSE CODE 205111

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2024**

**First Year - First Semester**

**TAMIL**

**இக்கால இலக்கியம்**

**(CBCS - 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

பகுதி - A (33 X 1 = 33)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. ‘நரசூரியர்’என்பவர்
   (a) பாலம் செய்தவர்கள் (b) மேன்மையானவர்கள்
   (c) வீரமானவர்கள் (d) வீரமற்றவர்கள்

2. காவிரி வெற்றிலைக்கு மாற்றாகப் பாரதியார் குறிப்பிடுவது யாது?
   (a) கோதுமை (b) கவிதை
   (c) தந்தம் (d) தங்கம்

3. குடும்பத் தலைவிக்குக் கதிரவன் எதைப் பரிசாக வழங்கினான்?
   (a) கிளி (b) வெப்பம்
   (c) பொன் ஒளி (d) வெளிச்சம்

4. ‘வீடு பேறு’ என்பதன் பொருளாகப் பாரதிதாசன் கூறுவது?
   (a) வீடு கட்டுதல் (b) உலகப் பற்றை விடுதல்
   (c) புகழடைதல் (d) பெருமையடைதல்

5. ‘வானம்பாடி’ இயக்கக் கவிஞர்களோடு இணைந்தியங்கியவர்?
   (a) கவிக்கோ (b) நா. காமராசன்
   (c) புதுமைப்பித்தன் (d) அறிவுமதி

6. நா. காமராசன் ஒரு ---------- கவிஞர் ஆவார்

(a) உருவகக் கவிஞர் (b) புதுக் கவிஞர்

(c) கவியரசு (d) சோசலிசக் கவிஞர்

7. 'கருப்பு மலர்கள்'யாரைக் கருத்தில் கொண்டு எழுதப்பட்ட நூல்?

(a) பெண்கள் (b) புறக்கணிப்பாளர்கள்

(c) முதியவர்கள் (d) மாற்றுத் திறனாளிகள்

8. 'பச்சை நெருப்பு' கவிதையை இயற்றியவர்

(a) அறிவுமதி (b) நா. காமராசன்

(c) ஈரோடு தமிழன்பன் (d) பிரபஞ்சன்

9. 'இதயம்'கவிதையை எவ்வகையைச் சார்ந்தது?

(a) புதுக்கவிதை (b) சென்ரியூ

(c) ஹைக்கூ (d) பாரதியார்

10. அறைத் தோழியாய் வந்தவள்

(a) யாழ்பாணத்துப் பெண் (b) மலையகத்துப் பெண்

(c) இந்தியப் பெண் (d) தமிழ்ப் பெண்

N-1570

11. வேலைக்காரி திருடியதாக சந்தேகப்பட்ட பொருள் எது?

(a) வெள்ளித் தம்ளர்
(b) கிண்ணம்
(c) வெள்ளிக் கரண்டி
(d) வெள்ளித் தட்டு

12. அறிவுமதியின் இயற்பெயர்

(a) மதியழகன்
(b) அறிவு
(c) அறிவுமதி
(d) அறிவழகன்

13. புதுக்கவிதையைத் தொடர்ந்து பாரதியாரால் தமிழுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட வடிவம்

(a) புதுக்கவிதை
(b) ஹைக்கூ
(c) சென்ரியூ
(d) லிமிரிக்கூ

14. வீட்டை விட்டுச் சென்ற மூர்த்தியால் கொலை செய்யப்பட்டவன்

(a) ஹரி
(b) சுந்தரகோஷ்
(c) பண்டாரி பக்கிரி
(d) மதி

15. வட்டியூர் ஜமீன்தாரின் பெயர்

(a) சுந்தரம் பிள்ளை
(b) வேதாசல முதலியார்
(c) முருகேசன்
(d) பாலு முதலியார்

N-1570

16. இளைஞன் தாத்தாவின் மீது மோதியதால் எது உடைந்தது?

(a) முட்டை (b) கை

(c) கால் (d) மூக்கு

17. திரைபடமாக்கப்பட்ட ஜெயகாந்தனின் கதை

(a) சில நேரங்களில் சில மனிதர்கள் (b) யுகசந்தி

(c) சீசர் (d) தனிமனிதன்

18. இந்திய அரசின் இலக்கியத்திறகான உயர்ந்த ஞானபீட விருதைப் பெற்ற இரண்டாம் தமிழ் எழுத்தாளர்

(a) பிரபஞ்சன் (b) ஜெயகாந்தன்

(c) புதுமைப்பித்தன் (d) யாருமில்லை

19. ‘கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும்’- சிறுகதை வெளிவந்த இதழ்

(a) வானம்பாடி (b) கலைமகள்

(c) விருட்சம் (d) தமிழ்ப்பொழில்

20. ‘கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும்’- சிறுகதை வெளிவந்த ஆண்டு

(a) 1942 (b) 1943

(c) 1950 (d) 1940

N-1570

21. காமாஷியை எவ்வாறு அழைப்பார்கள்?

(a) குஞ்சு
(b) காமாஷி
(c) பாப்பா
(d) அம்மு

22. காமாஷி எந்த ஊருக்கு வேலைக்குச் செல்கின்றாள்?

(a) கல்கத்தா
(b) பம்பாய்
(c) பெங்களூர்
(d) சென்னை

23. டைரி தாயரிக்கும் தொழில் உலையப்பணின் பயணம்

(a) 30 ஆண்டுகள்
(b) 35 ஆண்டுகள்
(c) 25 ஆண்டுகள்
(d) 40 ஆண்டுகள்

24. சி.ஃ.பி தமிழ் இணைய இதழை உருவாக்கியவர்

(a) ஜெயகாந்தன்
(b) ரா. வெங்கடேஷ்
(c) இறையன்பு
(d) அசோகமித்திரன்

25. யாருடைய நினைவிலிருந்து கம்மவார்கள் ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டிருக்கு வந்ததாகக் கதை கூறப்படுகிறது

(a) மங்கத் தாயாரு அம்மாள்
(b) சென்னா தேவி
(c) கோபல்ல கிராம மக்கள்
(d) கோவிந்தப்ப நாயக்கர்

N-1570

26. ‘சென்னாதேவி’என்ற மிக அழகிய பெண்ணின் காரணமாக எழுதப்பட்ட நாவல்

(a) கோபல்லபுரத்து மக்கள் (b) அந்தமான் நாயக்கர்

(c) கோபல்ல கிராமம் (d) பிஞ்சுகள்

27. கரிசல் இயக்கத்தின் பிதாமகன் யார்?

(a) கி. ராஜநாராயணன் (b) இராஜம் கிருஷ்ணன்

(c) வைரமுத்து (d) அம்பை

28. பாகீரதியின் வாழ்க்கையை நாசம் செய்தவன்

(a) ரகுபதி அய்யர் (b) அந்தோணி

(c) மருது (d) காலம்

29. ‘விவாகரத்து எதிர்ப்பு ஆலோசனை’ பணியைச் செய்த எழுத்தாளர்

(a) அனுராதா ரமணன் (b) கி. ராஜ நாராயணன்

(c) அறிவுமதி (d) புதுமைப் பித்தன்

30. இளமையில் பெண்ணுலகின் பெருமை அறியாது, காம உலகமாகக் கொண்டவர்

(a) கச்சியப்பர் (b) அருணகிரிநாதர்

(c) முருகன் (d) தி.ரு.வி.க.

N-1570

31. முருகன் வழிபாட்டிற்கு ---------- இன்றியமையாதது
(a) இல்லறம் (b) துறவறம்
(c) பக்தி (d) ஈடுபாடு

32. வண்ணதாசனின் இயற்பெயர்
(a) கல்யாண்ஜி (b) சி. கல்யாண சுந்தரம்
(c) வண்ணதாசன் (d) சிவசங்கரன்

33. 'அகம், புறம்' நவீன இலக்கியத்தில் எவ்வகை
(a) கட்டுரை (b) கவிதை
(c) புதினங்கள் (d) சிறுகதைத் தொகுப்பு

## பகுதி - B (7 X 6 = 42)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

34. (அ) 'வந்தே மாதரம்-ஜய வந்தே மாதரம்'என்ற பாரதியின் தேசீய கீதப் பாடலின் பொருளை எடுத்துரைக்க
(அல்லது)
(ஆ) 'நாட்டு வணக்கம்'- என்ற கவிதையின் பொருள் தருக

35. (அ) பெண்ணின் காலைக் கடமைகளாகப் பாரதிதாசன் கூறுவது யாது?
(அல்லது)
(ஆ) நல்ல குடும்பம் பல்கலைக்கழகம் என்னும் கருத்தைப் பாரதிதாசன் தமது 'குடும்ப விளக்கு' கவிதை நூலில் எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்?

36. (அ) வெள்ளைக் கவிதையில் கருப்பு மலர்களாகத் தொகுக்கப்பட்ட நா.காமராசனின் கவிதை தொகுப்பினை விவரி.
(அல்லது)
(ஆ) 'இரு பக்கங்கள்'- என்ற கவிக்கோவின் கவிதையின் பொருள் தருக

37. (அ) 'இதயம்'கவிதை தரும் பொருளை விளக்கிக் கூறுக.
(அல்லது)
(ஆ) ஈரோ தமிழன்பனின் கவிதையின் ஆழத்தை நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக

38. (அ) அண்ணாவின் 'வேலைக்காரி' நாடகத்தை திறனாய்வு செய்க
(அல்லது)
(ஆ) 'முட்டை' நாடகம் ஒரு யதார்த்த நாடகம் என்பதை நிறுவுக

39. (அ) 'கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும்'- சிறுகதையை திறனாய்வு செய்க
(அல்லது)
(ஆ) 'பாகீரிதி'- பாத்திரப்படைப்பை மதிப்பீடு செய்க

40. (அ) வண்ணதாசனின் எழுத்தின் விவரிப்பினையும், நுட்பத்தினையும் எடுத்துரைக்க
(அல்லது)
(ஆ) 'முருகின் - தொன்மை' என்ற கட்டுரையை சுருக்கித் தருக

N1571

COURSE CODE
205112

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**M.A DEGREE EXAMINATION, DECEMBER 2024**

**First Year - First Semester**

**TAMIL**

**அற இலக்கியங்களும் சமய இலக்கியங்களும்**

**(CBCS - 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

பகுதி - A (33 X 1 = 33)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. உலகம் எதை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது?
   (a) அகரம் (b) மழை
   (c) கடவுள் (d) அறிவு

2. குணமென்னுங் குன்றேறி -------------------- கணமேயுங்------------------அரிது விடுபட்ட சொல்லைத் தருக.
   (a) செய்க, இன்பம் (b) வெகுளி, காத்தல்
   (c) பேதைமை, தொழில் (d) அரியவாம், வண்ணம்

3. கல்லாதவர் எதற்கு ஒப்பாவார்?
   (a) களர் நிலம் (b) உவர் நிலம்
   (c) புஞ்சை நிலம் (d) நஞ்சை நிலம்

4. தொட்டனைத் தூறும் ------------------- மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு. விடுபட்ட சீரைத் தருக.
   (a) மணற் கேணி (b) கல் கேணி
   (c) ஊர் உண் கேணி (d) அகன் கண் கேணி

5. ஊடல் உணர்தல் புணர்தல் இவை --------------- கூடியார் பெற்ற பயன்
   (a) பெண் (b) காமம்
   (c) காதல் (d) அரிவை

6. கண்ணோடு கண்இணை நோக்கொக்கின் ------------------- என்ன பயனும் இல.

(a) வாய்ச்சொற்கள் (b) இன்சொற்கள்

(c) கடுஞ்சொற்கள் (d) அன்பில்லாத சொற்கள்

7. கொடுக்கக் கொடுக்கக் குறையாதது எது?

(a) தானம் (b) தருமம்

(c) கல்வி (d) மழை

8. அறநூல்களின் பொதுவான யாப்பு வடிவம்

(a) வெண்பா (b) ஆசிரியப்பா

(c) விருத்தப்பா (d) கலிப்பா

9. நாலடியாரின் சிறப்புப் பெயர்

(a) வேளாண் வேதம் (b) வெற்றி வேற்கை

(c) பதுமனார் (d) திராவிடவேதம்

10. பழமொழி நானூறு என்ற நூலின் காலம்

(a) கி.பி 2-ஆம் நூற்றாண்டு (b) கி.பி 5-ஆம் நூற்றாண்டு

(c) கி.பி 6-ஆம் நூற்றாண்டு (d) கி.பி 10-ஆம் நூற்றாண்டு

N1571

11. பழமொழிகள் ---------------- சார்ந்தவையாகும்

(a) இலக்கியம் (b) நாட்டுப்புறம்

(c) மானுடம் (d) நீதிநூல்

12. எத்தொழிலுக்கு ஒப்பான தொழில் எதுவும் இல்லை?

(a) உபாத்தியான் தொழில் (b) உழவுத் தொழில்

(c) பாட்டுத் தொழில் (d) இரும்புத் தொழில்

13. செல்வம் இல்லாதவனை யார் எல்லாம் விரும்பமாட்டார்கள் ?

(a) மனைவி (b) மக்கள்

(c) தாய் (d) அனைவரும்

14. ஆற்றில் தண்ணீர் ஓடவில்லை என்றால் அந்த ஆறு எதன் மூலம் தண்ணீர் கொடுக்கும்.

(a) ஊற்று (b) கசிவு

(c) பற்றுக்கோடு (d) கண்

15. இன்னா நாற்பது, இனியவை நாற்பதும் --------------- பற்றியது.

(a) அறம் (b) அகம்

(c) அகம், புறம் (d) எதுவுமில்லை

N1571

16. நீதி நூல்கள் சிறியது

(a) இனியவை நாற்பது
(b) இன்னா நாற்பது
(c) கார் நாற்பது
(d) ஏலாதி

17. சுற்றியிருப்பவர்களுக்குக் ---------------- கற்பித்தல் மிகவும் நல்லது என்ற கருத்தைக் கூறும் நூல் ----------- ஆகும்

(a) நாலடியார்
(b) திரிகடுகம்
(c) ஏலாதி
(d) கல்வி, இனியவை நாற்பது

18. இனியவை நாற்பது என்ற நூலின் ஆசிரியர்

(a) கபிலர்
(b) பூதஞ்சேந்தனார்
(c) கணிமேதாவியார்
(d) காரியாசன்

19. சிறிய அளவிலாயினும் தேவைப்படுபவர்களுக்குக் கேட்காமலேயே கொடுப்பது எப்பொழுதுமே நல்லது என்று எடுத்துரைக்கும் நூல்

(a) இன்னா நாற்பது
(b) சிற்றிலக்கியம்
(c) இனியவை நாற்பது
(d) பேரிலக்கியம்

20. 'நமச்சிவாய' என்று தொடங்கும் சிவபுராணம் எதில் இடம் பெற்றுள்ளது ?

(a) தேவாரம்
(b) திருவாசகம்
(c) திருமந்திரம்
(d) சிவபுராணம்

N1571

21. திருவாசகத்தின் முதல் பகுதி

(a) சிவபுராணம்
(b) கீர்த்தித் திருஅகவல்
(c) திருவண்டப் பகுதி
(d) போற்றித் திருவகவல்

22. ‘ஐந்தாம் வேதம்’ என்று அழைக்கப்படுவது

(a) நாலடியார்
(b) நால்வகை வேதங்கள்
(c) தேவாரம்
(d) நாலாயிர திவ்யபிரபந்தம்

23. இராமனுக்குத் தாலாட்டுப் பாடியவர்

(a) பெரியாழ்வார்
(b) குலசேகர ஆழ்வார்
(c) திருமங்கையாழ்வார்
(d) ஆண்டாள்

24. ‘எல்லாவற்றையும் துறந்தால் பற்று அற்ற நாதனைப் பற்றிக் கொள்ளலாம்’ என்றவர் யார்?

(a) நம்மாழ்வார்
(b) குலசேகர ஆழ்வார்
(c) பூதத்தாழ்வார்
(d) ஆண்டாள்

25. சிவஞானியர்களைத் தேடிச் சென்று நாம் அளிப்பதே உணவின் --------------- ஆகும்.

(a) அறம்
(b) புசித்தல்
(c) தருமம்
(d) ஊண்

N1571

26. எவன் விலங்கினுக்குச் சமம் எனத் திருமூலா் கூறுகிறார்?

(a) இறைவன்
(b) தீமை செய்பவன்
(c) அறத்தை அறியாதவன்
(d) புன்மக்கள்

27. "தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி சண்முகத் தெய்வமணி" என்று பாடியவா்

(a) தாயுமானவா்
(b) வள்ளலாா்
(c) பட்டினத்தாா்
(d) மணிவாசகா்

28. தாயுமானவா் கண்ட சைவம்

(a) சித்தாந்த சைவம்
(b) அடியாா் சைவம்
(c) பதி, பசு, பாச, சைவம்
(d) போற்றில் பாடல் சைவம்

29. தாயமானவர் பாடல்களால் ஈர்க்கப்பட்டவர்

(a) தேசிய விநாயகம் பிள்ளை
(b) வள்ளலாா்
(c) குணங்குடி மஸ்தான் சாகிபு
(d) எச்.ஏ.கிருட்டிணப் பிள்ளை

30. எவருடைய பாடல்களில் சிற்றிலக்கிய அமைப்புகள் இடம்பெற்றுள்ளன?

(a) வள்ளலாா்
(b) தாயுமானவா்
(c) குணங்குடியாா்
(d) பட்டினத்தாா்

N1571

31. புத்தரின் இயற்பெயர் என்ன?

(a) சித்தார்த்த கௌதமர்	(b) கவிமணி

(c) சித்தார்த்தன்	(d) போதி தத்துவர்

32. 'வையகத்தில் பிறப்புளதேல் இறப்பு முண்டு' என்று புத்தர் யாருக்குப் போதிக்கின்றார்?

(a) பரமதயாளன்	(b) சுஜாதை

(c) பிம்பிசாரன்	(d) யசோதை

33. ஒருவர் செய்யக் கூடாதது?

(a) நல்வினை	(b) தீவினை

(c) பிறவினை	(d) தன்வினை

பகுதி - B (7 X 6 = 42)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

34. (அ) 'மழை'குறித்து வள்ளுவர் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) 'இறைமாட்சி' பற்றிய வள்ளுவரின் கருத்துக்களை எடுத்துரைக்க

35. (அ) 'குறிப்பறிதல்'குறித்த வள்ளுவரின் விளக்கங்களை எடுத்துரைக்க

(அல்லது)

(ஆ) நட்பு கொள்ளும் வழிமுறைகளாக நாலடியார் கூறுவனவற்றை விளக்குக.

36. (அ) கல்வியின் மேன்மையை பழமொழி எங்ஙனம் எடுத்துரைக்கின்றது என்பதை விவரிக்க

(அல்லது)

(ஆ) 'நல்வழி' கூறும் அறக்கருத்துகளை நும் பாடப்பகுதி கொண்டு எடுத்துரைக்க

37. (அ) இன்னாதவை குறித்து இன்னா நாற்பது தரும் கருத்துக்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'இனியவை நாற்பது' தரும் கருத்துக்களை நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக.

38. (அ) சிவபெருமானின் திருமேனிச் சிறப்பைச் சம்பந்தர் எவ்வாறு எடுத்துரைக்கிறார்?

(அல்லது)

(ஆ) நம்மாழ்வார் திருமாலிடம் கொண்ட பக்தித் திறத்தை விவரி.

39. (அ) பட்டினத்தாரின் பக்தி உணர்வை விளக்குக

(அல்லது)

(ஆ) அறம் செய்தலின் விளைவுகள் குறித்து திருமந்திரம் கூறுவனவற்றை விளக்குக

40. (அ) புத்தரும் சுஜாதையும் உரையாடும் செய்திகளைத் தொகுத்துரைக்க

(அல்லது)

(ஆ) இறைவனிடம் குணங்குடி மஸ்தான் வேண்டுவன யாவை?

N1571

N-1572

COURSE CODE
205113

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2024**

**First Year - First Semester**

**TAMIL**

**இலக்கணம் -I தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணம்**

**(CBCS - 2020 onwards)**

Time : 2 Hours | Maximum : 75 Marks

PART - A (33 X 1 = 33)

Answer **all** the questions.

1. முதலெழுத்தின் வகைகள்

(a)உயிரெழுத்து (b)மெய்யெழுத்து
(c)சார்பு (d)உயிரும்,மெய்யும்

2. சார்பெழுத்துக்களின் மாத்திரை அளவு

(a)ஒன்று (b)இரண்டு
(c)அரை மாத்திரை (d)கால் மாத்திரை

3. புறத்தேயும் அகத்தேயும் புள்ளி பெறும் எழுத்தின் இன்றைய வடிவம்

(a)பகரம் (b)மகரம்
(c)ணகரம் (d)அகரம்

4. வினாப் பொருளைத் தரும் எழுத்துக்கள்

(a)ஆ, ஏ (b)ஐ, ஔ
(c)க, கா (d)அ,உ

5. ஒருமொழிக் குற்றியலுகரத்திற்கு எடுத்துக் காட்டு

(a)செக்குக்கணை (b)நுந்தை
(c)கேண்மியா (d)நாகி யாது

6. ஒரெழுத்து ஒருமொழியில் ஐ என்பதன் பொருள்

(a)அம்பு (b)அழகு
(c)பசு (d)குறில் எழுத்து

7. மொழிமுதல் குற்றிலுகரத்திற்கு எடுத்துக்காட்டு

(a)நுந்தை (b)சகடம்
(c)உசு (d)உவா

8. 'உப்ப காரமோடு ஞாகாரையு மற்றே' என்பதற்கு உரையாசிரியர் தரும் சான்று

(a)அவ் (b)தபு
(c)பொருந் (d)உரிஞ்

9. இதழ் குவிவதால் பிறக்கும் எழுத்துக்கள்

(a)அ,ஆ (b)இ,ஏ
(c)ஓ, ஒள (d)ஐ, ஈ

10. டகாரம், ணகாரம் பிறக்குமிடம்

(a)முதல்நா அண்ணம் (b)இடைநா அண்ணம்
(c)நுனிநா அண்ணம் (d)கடைநா அண்ணம்.

11. வந்தான் போயினான் என்பது பெறும் புணர்ச்சி

(a)பெயரோடு பெயர் (b)வினையோடு வினை
(c)பெயரோடு வினை (d)வினையோடு பெயர்

12. யான் + அது =

(a)யாது (b)யாவது
(c)நினது (d)எனது

13. வேற்றுமையில் தொக்கும் விரிந்தும் வரும் உருபுகளின் எண்ணிக்கை

(a)ஏழு (b)எட்டு
(c)ஆறு (d)நான்கு

14. பிரித்து எழுதுக. குன்றேறாமா

(a)குன்றேறு + ஆமா (b)குன்றில்+ஏறும்+ஆமா
(c)குன்றேறும்+ ஆமா (d)குன்று+ஏறா+மா.

15. அளவுப்பெயர்கள் தம்மின் குறைந்த சொற்கள் வருமிடத்து பெறும் சாரியை

(a)ஐ (b)அன்
(c)ஏ (d)இன்

N-1572

16. குற்றுகர அளவுப்பெயர்களில் ஒன்று

(a)கலம் (b)உழக்கு
(c)பனை (d)சாடி

17. வேற்றுமை புணர்ச்சியில் ஓகார ஈற்றுக்கு இடையில் வரும் சாரியை

(a)இன் (b)ஆன்
(c)அன் (d)ஒன்

18. நின்னை என்பதில் உள்ள 'ன்' என்பது

(a)சந்தி (b)எழுத்துப்பேறு
(c)சாரியை (d)விகாரம்

19. சேர்த்து எழுதுக: ஏழு + ஐ

(a)ஏழை (b)ஏழினை
(c)ஏழனை (d)எழுமை

20. யாது என்னும் குற்றுகர ஈறு பெறும் சாரியை

(a)ஐ (b)அன்
(c)இன் (d)ஆன்

N-1572

21. செய்யுளீடத்து அகரச்சுட்டானது

(a)நீட வரும்
(b)இயல்பாகும்
(c)விகாரம் பெறும்
(d)அளபெடுக்கும்

22. ஒருவரை முன்னிலைப்படுத்தி எதிர்முகமாக்கும் பொருளையுடைய சொல்

(a)அம்ம
(b)வாழிய
(c)பல
(d)உண்ணா

23. எதிர்மறை எச்சத்தில் வரும் ஓகாரம்

(a)ஒற்று மிகும்
(b)சாரியை பெறும்
(c)இயல்பாகும்
(d)திரியும்

24. பனை முன் கொடி வரின் ஒற்று

(a)ஒற்று பெறாது
(b)குன்றும்
(c)இயல்பாகும்
(d)மிகும்

25. சேர்த்து எழுதுக: மின் + கடுமை =

(a)மின்கடுமை
(b)மின்னுக் கடுமை
(c)மின்னுங் கடுமை
(d)மின்னின்கடுமை

N-1572

26. 'தமிழன் கிளவியும் அதனோரற்றே' எனும் நூற்பா உணர்த்தும் சாரியை

(a)அன் (b)அக்கு
(c)இன் (d)இக்கு

27. சேர்த்து எழுதுக: வயிறு + தீ

(a)வயிற்றுத் தீ (b)வயிற்றில் தீ
(c)வயிறு தீ (d)வயிற்றின் தீ

28. சுட்டு முதல் ஆய்தத் தொடர்மொழிக் குற்றுகர ஈறு

(a)வண்டு (b)அஃது
(c)எஃகு (d)தெள்கு

29. பிரித்து எழுதுக. பதினொன்று

(a)பதின் + ஒன்று (b)பதின் +நொன் + று
(c)பஃது + ஒன்று (d)பத்து + ஒன்று

30. தொல்காப்பியத்தின் மொத்த இயல்களின் எண்ணிக்கை

(a)மூன்று (b)ஒன்பது
(c)இருபத்தேழு (d)முப்பது

31. வல்லெழுத்து என்ப

(a)யரலவழள (b)ஙஞணநமன

(c)கசடதபற (d)ஆஈஊஓஔ

32. தொல்காப்பியரின் காலம்

(a)கி.பி.500 (b)கி.மு.500

(c)கி.பி 12 (d)கி.பி 2

33. ஆந்தை என்பது

(a)தொழிற்பெயர் (b)அளவுப்பெயர்

(c)நிறைப்பெயர் (d)விலங்கின் பெயர்

PART - B (7 X 6 = 42)

Answer **all** questions choosing either (a) or (b).

34. (a) தமிழ் எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? விளக்குக.

[OR]

(b) மயக்கம் எத்தனை வகைப்படும் ? சான்றுடன் விவரிக்க

35. (a) எழுத்துகளின் வடிவம் குறித்த தொல்காப்பியரின் கருத்துகளைத் தருக.

[OR]

(b) ஐகார குறுக்கம், ஔகார குறுக்கம் – விளக்குக.

36. (a) உயிர் எழுத்துக்கள் பிறக்குமிடங்கள் யாவை? விவரிக்க.

[OR]

(b) மூவகைத் திரிபுகளை விளக்கியுரைக்க

37. (a) புணர்ச்சியில் பொருள் வேறுபடுமிடங்களைச் சான்றுடன் விளக்குக.

[OR]

(b) உயிரீறு, மெய்யீறுகளின் பொதுப் புணர்ச்சியினைக் குறித்து எழுதுக.

38. (a) மெய்யீறுகள் உருபேற்கு முறையினை வித்துரைக்க.

[OR]

(b) குற்றுகர எண்ணுப்பெயர் புணர்ச்சி நிலையினைச் சுட்டுக.

39. (a) ”ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன” - விளக்குக.

[OR]

(b) எகர, ஒகர ஈற்றுப் புணர்ச்சியினைச் சான்றுகளுடன் எடுத்துரைக்க.

40. (a) ஆயிரம் என்ற எண்ணுப்பெயர் அளவு, நிறைப்பெயர்களுடன் புணரும் முறையினை விவரிக்க.

[OR]

(b) பத்து முன் பிற எண்கள் யாங்ஙனம் புணரும்? விளக்கியுரைக்க.

N-1573

COURSE CODE 205114

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2024.**

**First Year - First Semester**

**TAMIL**

**இலக்கியத் திறனாய்வியல்**

**(CBCS - 2020 onwards)**

Time : 2 Hours

Maximum : 75 Marks

பகுதி - A

(33 X 1 = 33)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. வாசகனுக்குத் திறனாய்வு என்பது
   (a) இன்பம்
   (b) பரினாமம்
   (c) சுகமானது
   (d) சிறப்பு

2. திறனாய்வின் நோக்கம்
   (a) அறிவுத் தேடல்
   (b) இலக்கியத்தைச் சிறப்பித்தல்
   (c) பகுத்து ஆராய்தல்
   (d) மதிப்பிடுதல்

3. இலக்கியக் கொள்கைகள் வகுக்கப்பட்டுப் பயன்படும் நிலைகள் எத்தனை?
   (a) 5
   (b) 6
   (c) 3
   (d) 2

4. திறனாய்வு நூல்களுக்கு உரை எழுதும் பணி செய்த தொண்டன்
   (a) ந.மு. வேங்கடசாமி நாட்டார்
   (b) சி.சு. செல்லப்பா
   (c) ஆறுமுக நாவலர்
   (d) உ.வே. சாமிநாதய்யர்

5. மதிப்பீட்டு முறைத் திறனாய்வு செயல்படும் முறைகள்
   (a) கருத்தடிப்படையில்
   (b) வடிவ நேர்த்தி
   (c) சமூகப் பண்பு
   (d) இலக்கிய உள்ளடக்கம்

6. தமிழின் தொடக்க காலத் திறனாய்வாளர்கள் யார்?

(a) உரையாசிரியர்கள் (b) மறைமலை அடிகள்

(c) அ.ச. ஞானசம்பந்தன் (d) க.நா.சு.

7. உரையாசிரியர்கள் உரையில் உள்ள திறனாய்வு முறை

(a) பாராட்டு முறைத் திறனாய்வு (b) விதிமுறைத் திறனாய்வு

(c) மதிப்பீட்டு முறைத் திறனாய்வு (d) மரபுவழித் திறனாய்வு

8. திறனாய்வுத் துறையில் தமிழின் வழிகாட்டி நூல் எது?

(a) கம்பராமாயண ரசனை (b) முல்லைப்பாட்டு ஆராய்ச்சி

(c) பட்டினப்பாலை ஆராய்ச்சி (d) இலக்கியக்கலை

9. இலக்கியப் படைப்பில் குறைகள் காணாமல் அதன் நிறைகளை மட்டும் விதந்து பேசும் திறனாய்வு என்பது

(a) மதிப்பீட்டு திறனாய்வு (b) ஒப்பீட்டுத் திறனாய்வு

(c) பாராட்டுமுறை திறனாய்வு (d) விதிமுறைத் திறனாய்வு

10. ஒரு பொருளைக் கண்களால் காணும்போது அவற்றின் வாயிலாக முன்னர் கண்ட காட்சிகளை மீண்டும் நினைவுபடுத்தி மகிழ்ச்சி அனுபவம் பெறுவது கற்பனை என்று கூறியவர்

(a) ஜோசப் அடிசன் (b) ஆபர் கிராம்பி

(c) ஆஸ்டின் (d) ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ்

N-1573

11. ‘கற்பனை’ என்றால் இன்னதென்று விளக்கம் கூற முயற்சி செய்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர்

(a) அடிசன்
(b) வேர்ஸ் வொர்த்
(c) வில்லியம் டெய்லர்
(d) கோலிரிட்ஜ்

12. உண்மைத் தன்மைக்கு மாறாக அமையும் கற்பனை எது?

(a) உலகியற் கற்பனை
(b) அல் இயற்கைக் கற்பனை
(c) இயற்கைக் கற்பனை
(d) அழகியல்

13. மனிதனுக்கு நம்பிக்கையும் மகிழ்ச்சியையும் தருபவை எவை?

(a) கனவு
(b) இலக்கியம்
(c) கற்பனை
(d) இயற்கை

14. புற உலகின் தாக்கத்தினாலோ, அக எழுச்சியினாலோ மனிதனின் உள்ளத்தில் கிளர்ந்தெழுவது

(a) கற்பனை
(b) உணர்ச்சி
(c) கோபம்
(d) அழகுணர்ச்சி

15. ஆற்றல் மிக்க உணர்ச்சி எங்குள்ளது?

(a) கோபத்தில்
(b) மகிழ்ச்சியில்
(c) உள்ளத்தில்
(d) சமநிலையில்

N-1573

16. ஒருவன் தன்னைக் குறித்தோ, பிறரைக் குறித்தோ தாழ்வாக எண்ணும் மெயப்பாடு

(a) மருட்கை (b) இளிவரல்

(c) அழுகை (d) வெகுளி

17. ஒன்றைப் பார்த்தவுடன் ஏற்படும் வியப்புணர்ச்சி எந்த மெய்ப்பாடு?

(a) உவகை (b) நகை

(c) மருட்கை (d) இளிவரல்

18. "ஒவ்வொரு இலக்கிய நூலும் வாசகர்களிடையே ஒவ்வொரு வித உணர்ச்சியை விளைவிக்கிறது. இவ்வுணர்ச்சி ஆற்றலே அவ்விலக்கிய நூலினை உருவாக்கும் கோட்பாடாகும்" என்று கூறியவர்

(a) சி.சு. செல்லப்பா (b) க.நா. சுப்பிரமணியம்

(c) ஆத். எஸ். கிரேன் (d) தமிழண்ணல்

19. நிகழ்சிகள், சுவைபடக் கூறப்படும் முறை, உத்திகள் ஆகியவை இணைந்திருக்கும் தொகுதியை ---------- எனலாம்.

(a) வடிவம் (b) உருவம்

(c) அமைப்பு (d) கட்டமைப்பு

20. கவிதையின் சிறப்பான உத்தி

(a) எதுகை (b) மோனை

(c) அடி (d) தொடை

N-1573

21. புறநிலை வடிவத்தில் மிக இன்றியமையாது இடம் பெறும் கூறு

(a) உருவம்
(b) உருவகம்
(c) உவமை
(d) உவமேயம்

22. இலக்கியங்களின் பாடுபொருளாக அமைவது

(a) அழகியல்
(b) காதல்
(c) இயற்கை
(d) சமூகம்

23. குடும்ப வாழ்க்கையை உருவாக்குகின்ற இன்றிமையாத கூறு

(a) திருமணம்
(b) சொத்துரிமை
(c) உடைமை காத்தல்
(d) உணர்வுநிலை

24. இலக்கியங்களை அணுகும் முறைகளுள் மிக இன்றியமையாதது

(a) சமூகவியல் அணுகுமுறை
(b) உருவவியல் அணுகுமுறை
(c) அறிவியல் அணுகுமுறை
(d) உளவியல் அணுகுமுறை

25. கற்பனையின் அடிப்படை ------------------ ஆகும்

(a) உணர்ச்சி
(b) மனம்
(c) கனவு
(d) மகிழ்ச்சி

N-1573

26. கவிதைப் படைப்பின் அடிப்படைக்கூறு ------------------- ஆகும்.

(a) உணர்ச்சி
(b) கற்பனை
(c) ஓசைநயம்
(d) சொல்வளம்

27. திறனாய்வு அணுகுமுறைகள் பலரது கவனத்தினையும் ஈர்த்த அணுகுதுறை

(a) தொல்படிமவியல்
(b) உளவியல்
(c) சமூகவியல்
(d) அறிவியல்

28. தொல்படிமவியல் ஆய்வாளர்களுள் குறிப்பிடத்தக்கவர்

(a) நார்த் ரோப்.ஃ.பிரை
(b) குஸ்தவ் யுங்
(c) சிக்மண்ட்
(d) மார்ட்டின்

29. தொன்மையான இலக்கிய நெறி எது?

(a) மானிடவியல்
(b) சமூகவியல்
(c) செவ்வியல்
(d) தொல்படிமவியல்

30. புனைவியல் இலக்கியம் எந்த காலகட்டத்தில் தோன்றியது?

(a) 18-19 ஆம் நூற்றாண்டு
(b) 19-20 ஆம் நூற்றாண்டு
(c) 18 ஆம் நூற்றாண்டு
(d) 20 ஆம் நூற்றாண்டு

31. உருத்தோற்றவியல் என்பது

(a) மானிடவியல்
(b) நடப்பியல்
(c) புனைவியல்
(d) உருத்தோற்றவியல்

32. பிரின்ஸ்டன் கலைக்களஞ்சியம் படிமங்களை எத்தனை வகைகளாக வரிசைப்படுத்தியுள்ளது?

(a) 5
(b) 6
(c) 4
(d) 10

33. மனித வாழக்கை குறித்த ஆராய்ச்சி என்பது இலக்கியத்தில் எவ்வாறு வழங்கப்படுகிறது?

(a) உணர்ச்சி
(b) சமூகம்
(c) உளவியல்
(d) நடப்பியல்

## பகுதி - B (7 X 6 = 42)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

34. (அ) தமிழில் திறனாய்வின் வளர்ச்சி, வரலாறு குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) இலக்கியக் கொள்கை என்பது யாது? விளக்குக

35. (அ) மதிப்பீட்டுமுறைத் திறனாய்வு என்றால் என்ன? விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) ஒப்பீட்டுமுறைத் திறனாய்வு பற்றிக் கட்டுரைக்க

36. (அ) கற்பனை என்றால் என்ன? அதன் பயன், வளர்ச்சி குறித்து எடுத்துரைக்க

(அல்லது)

(ஆ) அல் இயற்கைக் கற்பனை என்பதை சான்றுடன் எடுத்துக் கூறுக

37. (அ) ‘தகுதியான உணர்ச்சி விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) மெய்ப்பாடு என்பது கவிதைக்குரியது என்பதை விளக்குக

38. (அ) கட்டமைப்புக் கூறுகள் என்றால் என்ன? விளக்குக

(அல்லது)

(ஆ) இலக்கியப் படைப்பிற்கு இன்றியமையாதது உருவகம் - விளக்குக

39. (அ) அறவியல் கொள்கைகளின் அடிப்படைக் கூறுகளை விவரிக்க

(அல்லது)

(ஆ) ‘உளவியல்’வரையறை தந்து சான்றுகளுடன் எடுத்துரைக்க

40. (அ) செவ்வியல் இலக்கியப் பண்புகளைத் தொகுத்துரைக்க

(அல்லது)

(ஆ) குறியீட்டியல் பற்றிச் சான்றுகளுடன் விளக்கிக் கூறுக.

N-1573

N1574

COURSE CODE 205121

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**M.A DEGREE EXAMINATION, DECEMBER 2024**

**First Year - Second Semester**

**TAMIL**

**இலக்கணம் - 2 — தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையம்**

**(CBCS - 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

PART - A (33 X 1 = 33)

Answer **all** the questions.

1. மரூஉச் சொல் எது?
   (a)மண்மரம் (b)முன்றில்
   (c)சோணாடு (d)பொன்பறி

2. பின்வருவனவற்றுள் எது வண்ணச்சினைச் சொல்?
   (a)கருவூர்க் கிழான் (b)செங்கால்நாரை
   (c)சிவப்புக் கிண்ணம் (d)வெண்மலர்

3. வினா எப்போது செப்பாகும்?
   (a)சொல்ல வந்த பொருளைக் குறிக்கும் போது (b)மறைமுக விடை சொல்லும்போது
   (c)வினா எதிர் வரும்போது (d)உரையாடும்போது

4. நிலம் வலிது – என்பது எப்பொருளைச் சொல்வதற்கான எடுத்துக்காட்டு?
   (a)செயற்கைப் பொருள் (b)இயற்கைப் பொருள்
   (c)ஒருமைப் பொருள் (d)வன்மைப்பொருள்

5. பின்வருவனவற்றுள் எழுவாய் வேற்றுமைப் பொருளாக அமையாதது எது?
   (a)வியங்கொள வருதல் (b)பொருண்மை சுட்டல்
   (c)செயப்படுபொருள் (d)வினாநிலை

6. நான்காகுவதே ------------------- எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி

(a)ஐ (b)கு

(c)இன் (d)ஆல்

7. குப்பையது தலையைச் சிதறினான்,

குப்பையைத் தலைக்கண் சிதறினான்

இவற்றுள் அமைந்துள்ள வேற்றுமை மயக்கங்கள் யாவை?

(a)(அது, ஐ ) ( கண் , ஐ) (b)(அது, கண்) ( கண், ஐ)

(c)(அது,ஐ) (ஐ, கண்) (d)( அது, கண்) (ஐ, கண்)

8. ஒடு சொல் எதன் வழித்து?

(a)தாழ்வு (b)இணை

(c)உயர்வு (d)பகிர்வு

9. விளி எனப்படுப கொள்ளும் பெயரொடு -------------------தோன்றும்?

(a)மறையத் (b)உள்ளாகித்

(c)தெளியத் (d)தனியாகத்

10. இ,உ.ஐ, ஓ ஆகியன எவ்வகைப் பெயர்களில் விளி ஏற்கும்?

(a)உயர்திணை (b)அஃறிணை

(c)ஒருமை (d)பன்மை

N1574

11. பின்வருவனவற்றுள் நம்மூர்ந்து வரும் ஐகாரப் பெயர் எது?

| | |
|---|---|
| (a)நம்பி | (b)நம்தை |
| (c)நங்கை | (d)தங்கை |

12. எல்லாச் சொல்லும் ---------------------- குறித்தனவே

| | |
|---|---|
| (a)காலம் | (b)இடம் |
| (c)பொருள் | (d)தொழில் |

13. சீத்தலைச் சாத்தன் எவ்வகைப் பெயர்?

| | |
|---|---|
| (a)முறைப் பெயர் | (b)இயற்பெயர் |
| (c)சினைப் பெயர் | (d)சினை முதற்பெயர் |

14. கரியது எவ்வகைப் பெயர்க் கிளவி?

| | |
|---|---|
| (a)வினைப் பெயர்க் கிளவி | (b)பண்புகொள் பெயர்க் கிளவி |
| (c)எண்ணுக்குறிக் கிளவி | (d)ஒப்பினாகிய பெயர்க்கிளவி |

15. வேற்றுமை ஏற்காதது, காலத்தை உடையது எச் சொல்?

| | |
|---|---|
| (a)பெயர் | (b)வினை |
| (c)இடை | (d)உரி |

N1574

16. உண்டான் என்பது எவ்வகை வினை?

(a)தெரிநிலை வினை (b)குறிப்பு வினை

(c)குறிப்பு தெரிநிலை வினை (d)அஃறிணை வினை

17. முருகன் ஓடி விழுந்தான் என்பதில் ஓடி என்பது _____

(a)பெயரெச்சம் (b)வினையெச்சம்

(c)சிறப்பு எச்சம் (d)ஓடு என்னும் எச்சம்

18. பின்வருவனவற்றுள் எது விரவு வினையில் அமையாது?

(a)முன்னிலை (b)வியங்கோள்

(c)வினையெச்சம் (d)எண்கிளவி

19. தமக்கு இயல்பு இல்லாத சொல் எது ?

(a)பெயர் (b)வினை

(c)இடை (d)உரி

20. கொல் என்னும் இடைச்சொல் எப்பொருளைத் தரும்?

(a)இலக்கம் (b)ஐயம்

(c)அசைநிலை (d)இசைநிறை

N1574

21. பின்வருவனவற்றுள் அசைநிலைச் சொல்லாக அமையாதது எது?

(a)யா (b)கா

(c)போ (d)அம்ம

22. ஆங்க என்பது எவ்வகை இடைச்சொல்?

(a)அசைநிலை (b)இசைநிறை

(c)உரையசை (d)ஐயம்

23. உறு, தவ , நனி என்பன எப்பொருள் குறித்த உரிச்சொற்கள்?

(a)செய்தி (b)மரபு

(c)மிகுதி (d)தகுதி

24. மழ. குழ ஆகியன எப்பொருள் குறித்தன?

(a)முதுமை (b)இளமை

(c)தன்மை (d)பன்மை

25. பின்வருவனவற்றுள் செய்யுள் ஈட்டச் சொற்களில் அமையாத ஒன்று உள்ளது. அது எது?

(a)இயற்சொல் (b)திரிசொல்

(c)வடசொல் (d)கடிசொல்

N1574

26. செந்தமிழ் நிலங்கள் எத்தனை?

(a)12 (b)13

(c)21 (d)22

27. ணஃகான் ஒற்றே எவ்வகைச்சொல்?

(a)உயர்திணை (b)அஃறிணை

(c)மகடூஉ (d)ஆடூஉ

28. அவனிடம் சென்றான் எவ்வகை இடத்தைக் குறிக்கும்?

(a)தன்மை (b)பன்மை

(c)முன்னிலை (d)படர்க்கை

29. சுட்டுப் பெயர் எதற்கு முன்னதாக வரக் கூடாது?

(a)இயற்பெயர் (b)சிறப்புப்பெயர்

(c)சினைப்பெயர் (d)பட்டப்பெயர்

30. விளி வேற்றுமையுடன் சேர்ந்து வேற்றுமைகள் மொத்தம் எத்தனை?

(a)7 (b)2

(c)3 (d)8

N1574

31. ஐந்தாம் வேற்றுமைக்குரிய பொருள்களில் அல்லாத ஒன்று பின்வருவனவற்றுள் அமைந்துள்ளது. அது எது?

(a)வண்ணம் (b)வடிவு

(c)அளவு (d)தன்மை

32. புலி கொல் யானை என்பது எவ்வகைப் பெயர்?

(a)வண்ணச் சினைப் பெயர் (b)வினைத் தொகை

(c)தடுமாறு தொழிற்பெயர் (d)பெயரெச்சம்

33. தொல்காப்பியர் காட்டும் மொழி புணர் இயல்பில் அமையாத ஒன்று பின்வருவனவற்றுள் அமைந்துள்ளது. அது எது?

(a)நிரல் நிறை (b)சுண்ணம்

(c)மொழி மாற்று (d)கொண்டு கூட்டு

## PART - B (7 X 6 = 42)

Answer **all** questions choosing either (a) or (b).

34. (a) தொல்காப்பியர் காட்டும் பால் பாகுபாடுகள் பற்றி எழுதுக.

[OR]

(b) தொல்காப்பியம் காட்டும் வழுவமைதியைத் தக்க எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

35. (a) நான்காம் வேற்றுமை குறித்து எழுதுக.

[OR]

(b) வேற்றுமைப் பொருள் மயக்கம் பற்றி எழுதுக.

36. (a) விளியேலாப் பெயர்கள் பற்றி எழுதுக.

[OR]

(b) பெயருக்கான பொது இலக்கணம் பற்றி எழுதுக.

37. (a) விரவுப் பெயர்கள் பற்றி எழுதுக.

[OR]

(b) வினைச்சொல்லின் பொது இலக்கணம் பற்றி எழுதுக

38. (a) விரவு வினை பற்றிய செய்திகளை எழுதுக.

[OR]

(b) இடைச்சொல் பற்றி கட்டுரைக்க

39. (a) உவம உருபுகள் பற்றி எழுதுக.

[OR]

(b) உரிச்சொல்லின் பொது இலக்கணம் கூறி சான்றுடன் விளக்கியுரைக்க

40. (a) எச்சங்கள் பற்றி எழுதுக.

[OR]

(b) தொல்காப்பியர் காட்டும் மொழி புணர் இயல்பு பற்றிய செய்திகளைத் தருக.

N1575

COURSE CODE
205122

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**M.A DEGREE EXAMINATION, DECEMBER 2024**

**First Year - Second Semester**

**TAMIL**

**தமிழர் பண்பாடும் கலையும்**

**(CBCS - 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

பகுதி - A (33 X 1 = 33)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. சங்க காலக் கடற்கரை வாழ் மக்கள் எதனை வணங்கினர்?
   (a) கடற்கன்னி (b) கடல்தெய்வம்
   (c) சுறாக் கொம்பு (d) மீன்கூட்டம்

2. கந்துடைத்தெய்வம் என்பது எவ்வகைத் தெய்வம்?
   (a) மணலால் செய்யப்பட்டது (b) கல்லால் செய்யப்பட்டது
   (c) செம்பால் செய்யப்பட்டது (d) பூக்களால் செய்யப்பட்டது

3. பின்வருபவற்றுள் இசுலாம் சமயத்திற்கே உரிய இலக்கிய வகை அல்லாத ஒன்று எது?
   (a) கிஸ்ஸா (b) மசாலா
   (c) நாமா (d) சித்திக்

4. ராபர்ட் நொபிலி என்பவரின் மற்றொரு பெயர் யாது?
   (a) வீரமாமுனிவர் (b) சூசையப்பர்
   (c) மார்க்கோ போலோ (d) தத்துவப் போதக சுவாமிகள்

5. சென்னைப் பல்கலைக் கழகம் உருவான ஆண்டு எது?
   (a) 1857 (b) 1897
   (c) 1900 (d) 1947

6. சிந்து வெளி முத்திரைகள் குறித்து ஆராய்ந்தவர் யார்?

(a) மாக்ஸ் முல்லர் (b) வெப்பர்

(c) சுமித்து (d) ஈராசு

7. அழகுக் கலைகள் எத்தனை வகைப்படும்?

(a) ஆறு (b) ஐந்து

(c) ஏழு (d) எட்டு

8. பின்வருவனவற்றுள் அழகுக்கலைகளில் அமையாதது எது?

(a) சிற்பக் கலை (b) கட்டடக் கலை

(c) இசைக்கலை (d) ஓவியக்கலை

9. மாலை நேரத்தில் சங்க காலத்தில் வாசிக்கப்பெற்ற பண் எது?

(a) காஞ்சிப் பண் (b) செவ்வழிப் பண்

(c) மருதப் பண் (d) விளரிப் பண்

10. நாரத வீணை நயந்தெரி பாடல் என்ற குறிப்பு இடம் பெற்ற நூல் எது?

(a) முல்லைப் பாட்டு (b) குறிஞ்சிப் பாட்டு

(c) தொல்காப்பியம் (d) சிலப்பதிகாரம்

N1575

11. வீணாநாரதன் எனப் புகழப்பெற்றவர் யார்?
(a) மகேந்திரன் (b) நரசிம்மன்
(c) இராச சிம்மன் (d) வீரமகேந்திரன்

12. தமிழிசைச் சங்கத்தை உருவாக்கியவர் யார்?
(a) இராஜாஜி (b) குடந்தை சுந்தரேசன்
(c) அண்ணாமலைச் செட்டியார் (d) ஆர். கே. சண்முகம் செட்டியார்

13. குரவைக் கூத்தின் போது எவ்வகைப் பொருளால் ஆன பறை இசைக்கப்பட்டது?
(a) புலித்தோல் (b) மான் தோல்
(c) ஆட்டுத் தோல் (d) மாட்டுத் தோல்

14. தெய்வ விருத்தியில் அமையாத ஆடல் எது?
(a) மல் (b) துடி
(c) பேடு (d) சாந்தி

15. லதா விரிசிக என்ற நடன நிலையில் நிற்கும் பெண் ஓவியம் எங்கு உள்ளது?
(a) அழகர் கோவில் (b) காஞ்சிபுரம்
(c) மாமல்லபுரம் (d) சித்தன்னவாசல்

N1575

16. அடியார்க்கு நல்லார் எத்தனை வகை மெய்ப்பாடுகளைக் காட்டுகிறார்?

(a) 64 (b) 36

(c) 24 (d) 8

17. முதல் பெண் நாடக ஆசிரியர் யார்?

(a) மீனலோசினி (b) மீனாட்சி

(c) பர்வத குமாரி (d) வேம்பம்மாள்

18. பரிதிமாற் கலைஞர் இயற்றிய நாடகம் எது?

(a) கலாவதி (b) சீதாபதி

(c) கந்தன் கருணை (d) சகலாமிர்தம்

19. ஆனைக் கோயில் என்பது எவ்வாறு மாறி வழங்குகிறது.?

(a) அற்புதக் கோயில் (b) ஆலக்கோயில்

(c) ஆன கோயில் (d) இளங்கோயில்

20. துணைக் கோயில்களைக் கட்டும் வழக்கம் யார் காலத்தில் வந்தது?

(a) பல்லவர் (b) பாண்டியர்

(c) சேரர் (d) சோழர்

N1575

21. 'ஓவத்தன்ன இடனுடை வனப்பு' என்று யாருடைய அரண்மனை சுட்டப்பெற்றது?

(a) ஓரி
(b) காரி
(c) பாரி
(d) அதிகன்

22. கைலாசநாதர் கோயில் யார் காலத்தது?

(a) மகரசிம்மன்
(b) இராச சிம்மன்
(c) விஷ்ணுசிம்மன்
(d) நரசிம்மன்

23. சித்தன்ன வாசல் ஓவியத்தை வரைந்தவர் யார்?

(a) இளம் கௌதமன்
(b) வாகைக் கண்ணன்
(c) பெருஞ்சாத்தன்
(d) கல்பெருதச்சன்

24. பாண்டியர் கால ஓவியங்கள் உள்ள இடம் எது?

(a) பனைமலை
(b) காஞ்சிபுரம்
(c) திருமலைப் புறம்
(d) மாளிகைபுரம்

25. விசய நகர அரச சின்னம் எக்கோயிலில் வரையப் பெற்றுள்ளது?

(a) வரதராசப் பெருமாள்
(b) காமாட்சியம்மன்
(c) திருவெள்ளறை
(d) பட்டீசுவரம்

N1575

26. இந்திரன் வெள்ளையானையில் இருக்கும் தோற்றம் எங்கு ஓவியமாக உள்ளது?

(a) தஞ்சை (b) காஞ்சி

(c) மல்லை (d) திருவீழி மிழலை

27. சிற்பக்கலை நூல்களுக்கான பெயரல்லாத ஒன்று பின்னுள்ளது. அது எது ?

(a) மனை நூல் (b) சிற்ப நூல்

(c) தச்சு சாத்திரம் (d) சிற்பக் கிரந்தம்

28. சிற்ப அளவைகளில் அல்லாத ஒன்று பின்னுள்ளது. அதனைக் கண்டறிக

(a) அணு (b) யவை

(c) அங்குலம் (d) தார்

29. அர்ச்சுணன் அல்லது பகீரதன் தவம் சிற்பமாக எங்கு வடிக்கப்பெற்றுள்ளது?

(a) தஞ்சை (b) காஞ்சி

(c) மல்லை (d) திருவீழி மிழலை

30. நாலந்தா பல்கலைக்கழகம் சென்ற தமிழர் யார்?

(a) அமரேஷ் (b) பெஷாவர்

(c) கின்னார் (d) திந்நாகர்

N1575

31. தென்கலை வைணவம் எதனைச் சார்ந்தது?

(a) தமிழகம் (b) வடநாடு

(c) தொன்மை (d) சௌந்தரியம்

32. நாகையில் கட்டப்பட்ட விகாரத்தின் பெயர் யாது?

(a) நாகமணி (b) சூடாமணி

(c) புத்தம் (d) சங்கம்

33. அங்கோர்வாட் என்ற கோயிலைக் கட்டியவர் யார்?

(a) சுரேந்திரவர்மன் (b) நரேந்திரவர்மன்

(c) சந்திரவர்மன் (d) சூரியவர்மன்

பகுதி - B (7 X 6 = 42)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

34. (அ) சங்கச் கால சமய நெறியை விளக்கு

(அல்லது)

(ஆ) தமிழர் பண்பாட்டில் கிறித்துவம் பற்றி எழுதுக.

35. (அ) பண்பாட்டு ஊடாட்டம் பற்றி எழுதுக

(அல்லது)

(ஆ) தொல்காப்பியம் காட்டும் இசைச் செய்திகளைத் தருக

36. (அ) சிலப்பதிகாரம் தரும் இசை குறித்த செய்திகளைத் தருக

(அல்லது)

(ஆ) இசைத்தமிழ் நூல்கள் பற்றி எழுதுக

37. (அ) சங்க காலத்தில் நடைபெற்ற கூத்துகள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) நான்குவகை நாடகங்கள் குறித்து எழுதுக.

38. (அ) இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட நாடக வளர்ச்சி குறித்து எழுதுக

(அல்லது)

(ஆ) காப்பியக் காலக் கோயில்கள் பற்றி எழுதுக

39. (அ) பனைமலை, சித்தன்ன வாசல், திருமலைப்புரம் , தாமரைக்குளம் ஆகிய ஊர்களில் உள்ள ஓவியக் கலைத் திறன் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) மதுரை நாயக்கர் கால ஓவியங்கள் பற்றி எழுதுக.

40. (அ) மாமல்லபுரம் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) செப்புத் திருமேனிகள் காட்டும் கலைத் திறன் குறித்து எழுதுக.

N1575

| N-1576 |
|---|

| COURSE CODE |
|---|
| 205123 |

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2024**

**First Year - Second Semester**

**TAMIL**

**திறனாய்வுக் கோட்பாடு**

**(CBCS - 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

PART - A (33 X 1 = 33)

Answer **all** the questions.

1. மொழி வாயிலாக வாழ்வை மொழிவதே இலக்கியம் என்றவர்

(a)மு. வரதராசன் (b)ராலின்சன்
(c)ரஸ்கின் (d)ஹட்சன்

2. செவ்வியல் என்று கூறப்படும் கோட்பாடு

(a)முதன்மையியல் (b)குறிக்கோளியல்
(c)வெளிப்பாட்டியல் (d)தனிப்பாங்கியல்

3. ‘பாவலர் சரித்திர தீபிகம்’ என்ற நூலை வெளியிட்டவர்

(a)தண்டபாணி சுவாமிகள் (b)சதாசிவம் பிள்ளை
(c)ஔவை. சு. துரைசாமி பிள்ளை (d)சதாசிவ பண்டாரத்தான்

4. 'மதிப்பீட்டுத் திறனாய்வு' என்ற நூலை எழுதியவர்

(a)ஏ. சி. பிராட்லின் (b)கிளியந்த் புரூக்ஸ்
(c)காண்ட் (d)எட்கர் ஆலன்போ

5. ‘கலை கலைக்காகவே’ என்ற கொள்கையை மறுத்தவர்

(a)தாமஸ் ஹாப்ஸ் (b)ஐ. ஏ. ரிச்சர்டஸ்
(c)ஜான்லாக் (d)ஏ. சி. பிராட்லின்

6. கவிஞன் ஒரு பாட்டைப் புனையும் போதோ, படிப்பவர் அப்பாட்டைப் படித்து அனுபவிக்கும் போதோ புறநோக்கங்கள் இடம்பெறின் பாட்டின் மதிப்புக் குறைய நேரிடும் என்றவர்.

(a)பிராட்லி (b)வார்ட்டன்
(c)எட்கர் தஸ்டன் (d)ரிச்சர்ட்ஸ்

7. 'பழந்தமிழரின் மரபுவழி' என்ற நூலின் ஆசிரியர்

(a)ஆ. வேலுப்பிள்ளை (b)சோ. ந. கந்தசாமி
(c)கே.கே. பிள்ளை (d)கே. என். சிவராஜ பிள்ளை

8. ஒரு நாட்டின் கவிதை வரலாறு என்பது அந்நாட்டின் அரசியல், விஞ்ஞான, சமய வரலாற்றின் சாராம்சமாகும் என்று கூறியவர்

(a)கார்ல் மார்க்ஸ் (b)பிரெட்ரிக் ஏங்கல்ஸ்
(c)கார்லைல் (d)பால்ஃ ஜாக்

9. இவற்றுள் புதைநிலை வடிவம் எது

(a)இறைச்சி (b)உவமம்
(c)உள்ளுறை (d)உருவகம்

10. தமிழ்ப் புறப்பாடல்கள் ஹோமரின் காவியத்திற்கு அடிநிலையான இசைப் பாடல்களோடு ஒத்துள்ளன என்று கூறியவர்

(a)எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் (b)வ. வே. சு. ஐயர்
(c)வையாபுரிப் பிள்ளை (d)க. கைலாசபதி

11. காதலை அத்வைதமாகச் சமரசப்படுத்துகின்ற போக்கினைத் தன் படைப்புகளில் மேற்கொண்டவர்

(a)சுஜாதா (b)அகிலன்
(c)ஜெயகாந்தன் (d)தி. ஜானகிராமன்

12. ‘கோவேறு கழுதைகள்’ புதினத்தின் ஆசிரியர்

(a)கி. ராஜநாராயணன் (b)பூமணி
(c)ராஜம் கிருஷ்ணன் (d)இமையம்

13. இயங்கியல் பொருள்முதல் வாதம் எதற்குச் சேவை செய்கிறது?

(a)முதலாளி வர்க்கம் (b)பாட்டாளி வர்க்கம்
(c)நிலவுடைமை வர்க்கம் (d)பூர்சுவா வர்க்கம்

14. சமூக நடவடிக்கைகள் தலைசிறந்த மனிதர்களின் சிந்தனையால் உருவாகின்றன என்று கூறுவது

(a)அகநிலைக் கருத்துமுதல் வாதம் (b)புறநிலைக் கருத்துமுதல் வாதம்
(c)வரலாற்றுப் பொருள்முதல் வாதம் (d)இயங்கியல் பொருள்முதல் வாதம்

15. மார்க்சிய முறையில் பெண்ணியத்தை விளக்குவது

(a)பிரெஞ்சுப் பெண்ணியம் (b)அமெரிக்கப் பெண்ணியம்
(c)ஆங்கிலப் பெண்ணியம் (d)இவற்றுள் எதுவும் இல்லை

